## பல்லவர்கள்

பல்லவர்கள் காஞ்சிபுரத்தை தலைமையாகக் கொண்டு கி.பி 10 ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் வடக்குப் பகுதியை ஆண்டனர். இவர்களைப் பற்றிக் கூறும் பட்டயங்கள் ஆரம்ப காலத்தில் பிராகிருதத்திலும், பின்னர் சமஸ்கிருதத்திலும், தமிழிலும் காணப்படுகின்றன.

இவர்களது வரலாற்றை மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம். பிராகிருதப் பட்டயங்களால் அறியப்படும் வரலாற்றை முற்காலப் பல்லவர் காலம் எனவும், சமஸ்கிருதப் பட்டயங்களின் மூலம் அறியப்படும் வரலாற்றை இடைக்காலப் பல்லவர் காலம் எனவும் தமிழ்ப் பட்டயங்களின் காலம் பிற்காலப் பல்லவர் காலம் எனவும் குறிப்பிடலாம்.

### சமூக நிலை

பல்லவர் கால சமூகம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவுகளைக் கொண்டது. அந்தணர் சமூகத்தில் உயர் மதிப்பு பெற்றனர். பிரம்மதேயங்களைப் பெற்றனர். அரச அதிகாரிகளாகப் பணியாற்றினர். அமைச்சர், திருமந்திர ஓலை நாயகம், கிராமக் கணக்கர், கரணத்தார், வாரிய உறுப்பினராகவும் இருந்தனர்.

சத்திரியர் என்பவர் அரச இனத்தைச் சேர்ந்தோர் ஆவார். மன்னர்களின் சிலர் சைவ நாயன்மார்களாகவும், கற்றறிந்த மேதைகளாகவும் காணப்பட்டனர். காடுகளை அழித்து நாட்டை உருவாக்கி 'காடு வெட்டிகள்' எனப் பெயர் பெற்றனர்.

வைசியர் என்போர் வணிகர்கள் ஆவர். பல்லவர்கள் காலத்தில் இந்தோசீனா, இந்தோனேசியா, இலங்கை, பாரசீக வளைகுடா போன்ற நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

நெசவாளர்கள், ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள் செய்தல், எண்ணெய் தயாரித்தல், ஆடு மாடு வளர்த்தல், மட்பாண்டம் செய்தல் போன்ற தொழில்கள் செய்வோர் இருந்தனர்.

பல்லவர் காலத்தில் பெண்கள் சமயப்பற்று மிகுந்தவராக இருந்தனர். உயர்குடிப் பெண்கள், சாதாரணப் பெண்களும் சமயப் பணிகள் செய்துள்ளனர். பெண்கள் நெசவு, நூல் நூற்றல், நெல் குற்றல், பால் கறத்தல் - போன்ற

பணிகளைச் செய்தனர். உணவுப் பழக்க வழக்கங்களில் அரிசி இடம் பெறுகிறது. நெய் பால் போன்றவைகள் முக்கிய உணவுப் பொருட்களாக உள்ளன. 'அக்கார அடிசில்' என்ற சர்க்கரைப் பொங்கல் தேவர்களுக்குப் படைக்கப்பட்டது. வெற்றிலை போடும் பழக்கம் இருந்துள்ளது. அவல் அமுது, தயிர்ச்சோறு, இறைச்சி உணவும் உண்ணப்பட்டது.

மூன்று பிரிவுப் பல்லவர்கள்

1. பிராகிருத பல்லவர்கள்
2. வடமொழிப் பல்லவர்கள்
3. தமிழ்ப் பல்லவர்கள்

பிராகிருத பல்லவர்கள்

பப்பதேவன், சிவகந்த வர்மன், விசயகந்தவர்மன், இளவரசன், புத்தவர்மன் ஆகியோரது பெயர்கள் மயிதவோலு, உறுவுபள்ளி, குணபதேய என்ற இடங்களில் கிடைத்த பட்டயங்களின் மூலம் வெளிப்படுகின்றன. ஆந்திரப் பகுதியையும், தொண்டை நாட்டின் வட பகுதியும் பல்லவ நாடாக விளங்கின.

## இடைக்காலப் பல்லவர்கள்

இவர்களில் முதலாம் குமாரவிஷ்ணு, முதலாம் கந்தவர்மன், இரண்டாம் சிம்மவர்மன், மூன்றாம் கந்தவர்மன், மூன்றாம் குமாரவிஷ்ணு போன்ற மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்

## பிற்காலப் பல்லவர்கள்

சிம்மவிஷ்ணுவின் மரபில் வந்த முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், பரமேஸ்வரவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன், மூன்றாம் மகேந்திரவர்மன் போன்றோர் சிறந்த மன்னர்களாக விளங்கினர். நரசிம்மவர்மன் காலத்தில் உருவாக்கப்பட்ட மாமல்லபுரத்துக் கலைகள் இன்றும் சிறப்புற விளங்குகின்றன.

## அளவைகள், நாணயங்கள்

பல்லவர் காலத்தில் விளங்கிய நில அளவைகள் குழி, வேலி என்பன. மேலும் கலப்பை, நிவர்த்தனர். பட்டிகா பாடகம் எனவும் நில அளவைகளாக வழங்கின.

முத்திரையாக கருநாழி, நாள்வாநாழி, மாநாய நாழி, பணமாயாநாழி, நாராய(ண)நாழி, என்பனவும் உழக்கு, சிறிய அளவையான பிடி, சோடு, மரக்கால், பதக்கு, குறுணி, காடி, கலம் என்பனவும் பயன்பட்டன.

நிறுத்தலளவையாக கழஞ்சு, மஞ்சாடி என்பவை பொன் நிறுக்கும் அளவைகளாகும்.

பல்லவரின் காசுகள் செம்பாலும். வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பட்டவை. அவை நந்தி, பாய்மரக் கப்பல், சுவஸ்திக், சங்கு, சக்கரம், வில், மீன், குடை, கோயில், குதிரை, சிங்கம் ஆகிய உருவங்களைப் பொறித்தும் வழங்கப்பட்டன.

இவர்களின் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பண்களை அமைத்து பாடல்கள் பாடியுள்ளனர். முதலாம் மகேந்திரவர்மன் "மத்த விலாசப் பிரகடனம் என்ற நாடகத்தை வடமொழியில் எழுதினான்.